

இராஜஸ்தான் மாநிலம், உதய்பூரில் 21.8.2023 மற்றும் 22.8.2023 ஆகிய நாட்களில் நடைபெறும் 9வது இந்திய காமன்வெல்த் நாடாளுமன்ற சங்கத்தின் பிராந்திய மாநாட்டில் கலந்துகொள்ள பேரவைத் துணைத் தலைவர் திரு. கு. பிச்சாண்டி, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன் மற்றும் சட்டமன்றப் பேரவைச் செயலாளர் முனைவர் கி. சீனிவாசன் ஆகியோர் கலந்துகொள்ள 20.8.2023 அன்று காலை சென்னையிலிருந்து புறப்பட்டனர்.

புதுக்கோட்டை மாவட்டக் கழக முன்னாள் பொறுப்பாளர்

## க.சிதம்பரத்தின் துணைவியார் சி.ராஜேஷ்வரி மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் !

சென்னை, ஆக. 22 -

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் க.வீரையாவின் சகோதரரான புதுக்கோட்டை மாவட்டக் கழக முன்னாள் பொறுப்பாளர் க.சிதம்பரத்தின் மனைவியும், புதுக்கோட்டை தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் மு.க.ராமகிருஷ்ணன் மாமியாரும், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் மு.க.முத்துக்கருப்பன், மு.க.சீனிவாசன் ஆகியோரின் அத்தையும், தொழிலதிபர் சி.ஆசைத்தம்பியின் தயாருமாகிய சி.ராஜேஷ்வரி அவர்கள் நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துள்ளார்.

## வேராய் விழுதாய் நிற்கும் முதல்வரும் சின்னவரும்!

என் இனிய தமிழ் சொந்தங்களே.......! உங்கள் சட்டங்கள் என்ன பட்டங்களா நூலை நம்பி பறக்க விட? நமது மாநில மாணவ மாணவியர் பகுத்தறிவு வளர்ச்சி பெற்றவர்கள். அவர்களுக்கு நீட் என்ற தூக்கு கயிறு எதற்காக?

ஒரு அப்துல் கலாமை உருவாக்கிய தமிழகம் மேலும் பல கலாம் களை உருவாக்கி விடுவார்களோ என்ற பயத்தினால் நூல்கள் அமைக்கின்ற தடை வேலியா இது? நாம் நூல் வேலிகளை அறுத்தெறிந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. மீண்டும் அவை உருமாறி வரும் நோக்கத்தை புரிந்து கொள்ள முடியாதவர்களா திராவிடத் தமிழர்கள்?

பணிவுக்கும் துணிவுக்கும் வித்தியாசம் தெரிந்தவர்கள். வற்றுக்கும் பிடிவாதத்துக்கும் உள்ள வேற்றுமையை உணர்ந்தவர்கள். தேசப்பற்று எம்மிடம் நிரம்ப உண்டு. ஆனால் உங்கள் பிடிவாதங்கள் சட்ட வடிவிலே வந்து நமது மக்களை வதைக்கு மேயானால் ....எமது மக்களுக்காக அதனை உடைத்தெறிய தெரிந்தவர்கள் நாங்கள். நாளைய தமிழகமே நமது மாணவ மணிகள் தான். அவர்கள் வாழ்வை இருட்டாக்கி..கோலற்ற குருடர்களாய் நமது மாணவ சமுதாயத்தை தடுமாற வைப்பதே உங்கள் சட்டத்தின் நோக்கமாக தெரிகிறது...!

இன்றைய நமது வாழ்வு முழுவதும் அழிக்கப்பட்டாலும்.....நாளைய நமது மாநிலம் ஒளியிழந்து நிற்பதை ஒருபோதும் நாம் பொறுக்க மாட்டோம். நீதிக்கு போராடும் பரம்பரை நமது பரம்பரை. மன்னவனின் தீர்ப்பால் கணவனை இழந்த கண்ணகி கதறி அழுது.....வெள்ளை புடவை கட்டி மூலையிலே முடங்கி விடவில்லை!

சட்டம் செய்த தவறினை அரச சபையிலே சுட்டிக்காட்டி....தரையிலே அவன் செங்கோல் உருண்டு விழ...அதை சுமந்த மன்னனோ தன் உயிரை விட.......மதுரையை எரித்து விட்டுப் போன கற்புக்கரசி கண்ணகி வழி வந்த இனம் நமது திராவிட இனம்.

எத்தனை மாணவ , மாணவியர் உயிரை பலி கொடுத்தார்கள் உங்கள் நீட் சட்டத்துக்காக. அதைப் பார்த்த பின்னால் ஆவது வருந்தி திருந்தி நீட் சட்டத்தை ஒன்றிய அரசு வாபஸ் பெறும் என நம்பினோம். அது நடக்கவில்லை. அப்போதுதான் எமது மக்கள் புரிந்து கொண்டார்கள் உங்கள் சட்டங்களின் நோக்கம் மக்களுக்காக அல்ல! உங்கள் சர்வாதிகார ஆட்சியை நிலை நிறுத்த! நம் தேசத்தின் ஜனநாயக வேரை அறுக்க,! நடக்காது. ஒருபோதும் அது நடக்க விடமாட்டோம். எங்கள் நாடு தமிழ்நாடு! அதில் எல்லா சுதந்திரங்களும் இருந்தால் மட்டுமே நமது நாடு இந்திய நாடு என்று சொல்லுவோம்! ஆட்சியும் அரசியலும் மக்களுக்காக நாம் நடத்துகின்ற காட்சிதான். அதுவல்ல நமது லட்சியம். பதவிகளை பார்த்து பல் இளிப்பவர்கள் அல்ல நாங்கள். மக்களுக்கோ ...மாணவர்களுக்கோ .....இந்தப் பதவியால் பயனில்லை என்றால்... அது தேவையில்லை என நினைப்பவர்கள் திராவிட தமிழர்கள்.

இதனை நன்கு உணர்ந்து கொண்ட மற்ற மாநில மக்களும் நம்மோடு கைகோர்க்கத் துணிந்து விட்டார்கள். சன்மார்க்க அரசியலையும் மதவெறி தூண்டுதலையும் மொழி திணிப்பையும் ஜனநாயக விரோத சட்டங்களையும் எதிர்ப்பதற்கு திராவிட அரசியலே சரியான வழி என்பதை அவர்களும் புரிந்து கொண்டார்கள். நமது ஆட்டுத்தாடி ஆளுநரின் குள்ளநரி வேலைகளும் தவறானவை என்பதை அவர்களே பேசுகிறார்கள். அதனால் உருவானதே மகத்தான இந்திய அணி.

இதுவே ஏக இந்திய சட்டங்களுக்கு எதிரான சாவு மணி. மக்களுக்கும் தேசத்துக்கும். ஜனநாயகத்துக்கும் உதவாத இன்றைய அரசை மூட்டை முடிச்சோடு அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் வீட்டுக்கு அனுப்பி வைப்பதே இந்திய அணியின் முதல் பணி.! அதற்கு வேராய் விழுதாய் நிற்கிறார்கள் நமது முதல்வரும் சின்னவரும்!

ஒட்டு மொத்த இந்திய தேசமும் போற்றிக் கொண்டாடிய பழுத்த முதிர்ச்சி பெற்ற நமது முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களிடம் குருகுல வாசம் பெற்றவர்கள் இவர்கள். பெரியாரின் பேரனும் கொள்ளு பேரனும் ஆவார்கள். அண்ணாவின் ஆற்றலை போற்றி வளர்ந்தவர்கள். தமிழக மக்களின் பூரண அன்பையும் ஆசிகளையும் பெற்றவர்கள். கடமை கண்ணியம் கட்டுப்பாடு கற்றவர்கள்.

ஆனாலும் போர்குணம் கொண்டவர்கள். வீரமும் விவேகமும் இணைய பெற்றவர்கள். சொல்லை செயலாக்க தெரிந்தவர்கள். இவர்களின் வழிகாட்டுதலோடு இந்திய அணி இந்தியாவை ஆளப்போவது உறுதி!



வி.செ.குகநாதன்
திரைப்பட இயக்குநர்

## திராவிடர் இயக்கம் என்று கூற அ.தி.மு.க.விற்கு முற்றிலும் அருகதை கிடையாது!

### சிவகங்கையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேச்சு!

சிவகங்கை, ஆகஸ்ட் 15.

சிவகங்கை மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் விழா பொதுக் கூட்டங் கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் மற்றும் பல்வேறு அணிகளின் சார்பில் நடைபெற்று வருகிறது . இதன் தொடர்ச்சியாக கல்லல் கிழக்கு ஒன்றியகழகத் தின் சார்பில் அரண்மனை சிறுவயலில் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் நா.நெடுஞ்செழியன் தலைமையில் பொதுக்குழு உறுப்பினர்கள் கரு. அசோகன், தெய்வானை இளமாறன், பள்ளத்தூர் கே எஸ். ரவி. பி.டி.ஆர். முத்து, ஜெ. மதார்சேட்,

கல்லல் ஒன்றியக்குழு தலைவர் திருமதி சொர்ணம் அசோகன், மேற்கு ஒன்றிய செயலாளர் குன்னக்குடி சுப்ரமணியன், மாவட்ட இலக்கிய அணி தலைவர் புலிக்குத்தி சீனிவாசன், மாவட்ட ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திருமதி சரஸ்வதி அண்ணா, மாவட்ட கவுன்சிலர் திருமதி மஞ்சரி லட்சுமணன், ஒன்றிய கவுன்சிலர் ரேவதி நெடுஞ்செழி யன், சுப.வடிவேலு, ஜோசப், ஜேசுதாஸ் , ஆர். தமிழரசன், செல்வராஜ், கவிதா பரணி கிட்டு ,ஜோசப், செல்வம், ராஜேந்திரன், நம.சவுந்திரராசன், செங்கோல், தகவல் தொழில் நுட்ப அணி திருமதிகலா காசிநாதன், சுப்பிரமணியன், சில்வர் ஸ்டார்க் சேவியர், பாலகிருஷ்ணன், மார்க்கண்டன், நாகராஜன், கட்டதேவன் கார்த்திக், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கிளை செயலாளர் ராஜா முகமது வரவேற்றுப் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளரும் , கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர். பெரிய கருப்பன் கலந்து கொண்டு பேசியதாவது.

மாவட்டம் முழுவதும் முதல்வர் தளபதி அவர்கள் உத்திரவின் பேரில் ஒன்றிய நகர பேரூர் கழகங்களின் சார்பில் தலைவர் கலைஞர் பிறந்தநாள் விழா பொதுக் கூட்டங் கள் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றது. இந்த கூட்டங்கள் ஒன்றினை ஒன்று மிஞ்சும் வகையில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் வரலாற்றில் மறைக்க முடியாத தலைவராவார். அவரது 100வது பிறந்தநாளை கொண்டாடுகிறோம் என்றால் அதற்கு அவர் முற்றிலும் தகுதியானவர்.

ஆத்திக வழியில் கூறினார் தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு சுயம்பு ஆவார். மிகவும் பிற்பட்ட சமுதாயத்தில் ஏழை சாமானியருக்கு மகனாக பிறந்தவர் தலைவர் கலைஞர். தனது 14 வயதில் தமிழ் மொழிக்காக கொடி ஏந்தி கொள்கை வழியில் போராடியவர். பேரறிஞர் அண்ணா 1957ஆம் ஆண்டு கழகத்தை உருவாக்கினார். 1967 இல் கழகம் தேர்தலில் போட்டியிட்டு ஆட்சியைப் பிடித்தது. இத் தேர்தலில் வெற்றி பெற பேரறிஞர் அண்ணா , கலைஞர் ஆகியோரின் பங்குமிகவும் முக்கியமான தாகும் .50 ஆண்டுகளாக கழகத் தலைவராக கட்சி தலைமை ஏற்று கட்சியினை சிறப்பாக நடத்தி வந்தார் .ஐந்து முறை முதல்வராக பொறுப்பு வகித்து பலஅரிய மக்கள் நலத்திட்டங் களை சிறப்பாக செயல்படுத்தினார்.

இத்திட்டங்கள் இந்தியாவிற்கே நாற்றங்கலாக அமைந்தது. தலைவர் கலைஞரின் பல்வேறு திட்டங்களை பல்வேறு மாநிலங்களில் செயல்படுத்தினார்கள். .தி.மு.க. என்பது கொள்கை ரீதியான ஜனநாயக இயக்கம். இதில் தலைவர்கள் மாறலாம். ஆனால் கொள்கை என்றும் மாறாது. பேரறிஞர் அண்ணா வழியில் தலைவர் கலைஞர் ஆட்சியை நடத்தினார். அவரது மறைவிற்குப் பின் முதல்வர் தளபதி அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற நாள் முதல் பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் வழியில் , திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருகிறார். பா.ஜ.க.வால் ஜனநாயகம் நாட்டில் நசுக்கப்படுகிறது . ஜனநாயகத்தை அழிக்கும் பா.ஜ.க.வை எதிர்க்கும் சக்தி, வலிமை பெற்றவர் தலைவர் முதல்வர் தளபதி ஆவார். பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதா மறை விற்கு பின் முதல்வராக இருந்த எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியை பா.ஜ.க.விடம் அடகு வைத்து விட்டார் . எவ்வித நிபந்தனை யின்றி அடிமையாகி விட்டார் . மக்கள் விரோத சட்டங்கள் ஒன்றிய பா.ஜ.க. அரசால் இயற்றப்பட்ட பொழுது அதை எதிர்க்க திராணி யற்ற வராக விளங்கினார். அவர்களது தலைவி ஜெயலலிதா சில நேரங்களில் பா.ஜ.க.வை எதிர்த்தார். ஆனால் தன்னை காப்பாற்றிக் கொள்வதற்காக பழனிச்சாமி ஆட்சியையும் கட்சியையும் அடகு வைத்தார். எனவே அ.தி.மு.க. திராவிடர் இயக்கம் என்று கூறும் தகுதி முற்றிலும் கிடையாது. அதற்கு அருகதையும் கிடையாது. ஒன்றிய பா.ஜ.க. அரசு இன விரோத, மக்கள் விரோத அரசாக செயல்பட்டு வருகிறது . மோடி தேர்தலின் போது கறுப்பு பணத்தை மீட்டு ஒவ்வொருவரின் கணக்கில் ருபாய் 15லட்சம் போடுவேன் என்று கூறினார்.

ஆனால்அதை செய்யவில்லை. அவர் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வில்லை என்று அ.தி.மு.கவை சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் ஒரிரு நாட்களுக்கு முன்பு கூறியுள்ளார். அ.தி.மு.க. மக்களை பற்றி சிறிதும் சிந்திக்க மாட்டார்கள். மக்கள் நலனில் சிறிது கூட அக்கறை இல்லாதவர்கள். அவர்கள் கொள்ளை அடித்த பணத்தை ஆட்சியில் இருந்தபோது ஆட்சியை காப்பாற்றுவ தற்காக பா.ஜ.கவிடம் சரண் அடைந்தார்கள். தற்பொழுது அவர்கள் 4 ஆண்டுகளில் கொள்ளையடித்த பணத்தை காப்பாற்றவே இப்போதும் அடிமையாக உள்ளார்கள். வருகிற 2024 தேர்தலில் பா.ஜ.க அரசு அகற்றப்பட வேண்டும். அதற்காக நாட்டின் முக்கிய எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைத்து இந்தியா கூட்டணியை உருவாக்கியவர் நமது தலைவர் தளபதி அவர்கள். அந்த கூட்டணியை உருவாக்கிய பெருமை நமது தளபதிக்கு உண்டு .எனவே வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் முழு அளவில் நாம் வெற்றி பெற வேண்டும். அதற்கு இந்த கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் பொதுக்கூட்டத்தில் நாம் அனைவரும் சபதம் ஏற்க வேண்டும். இதனால் இந்தியாவிற்கு விடியல் கிடைக்கும் . இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் த.சேங்கை மாறன், கே. எஸ்.எம். மணிமுத்து, ஆகியோர் பேசினார்கள். பொதுக் கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் கழக தலைவரும் கழக கொள்கை பரப்புச் செயலாளருமான திண்டுக்கல் ஐ.லியோனி தலைமையில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் மக்கள் மனதில் நிலைத்து நிற்ப தற்கு காரணம் பழைய பாடல்களே என்ற தலைப்பில் பேராசிரியர் விஜயகுமார், தேவகோட்டை ராஜன் ஆகியோரும் இன்றைய பாடல்களே என்ற தலைப்பில் கவிஞர் இனியவன் தூத்துக்குடி ராஜதுரை ஆகியோர் வாதிட்டார்கள். இந்த பொதுக்கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பரணி கிட்டு, கிங். கார்த்தி, எஸ். எம். மதிவாணன், ஒன்றிய கழகச் செயலாளர்கள்யோக. கிருஷ்ணகுமார், எம். ஜெயராமன், பூபால சிங்கம், நாகனிரவி, கே. ஆர்.ஆனந்த், விளையாட்டு மேம்பாட்டு அணிஅமைப்பாளர் கே. எஸ். நாராயணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் விஜயேந்திரன், நா.அண்ணா, குழந்தைசாமி, செபஸ்தியான், முருகப்பன், பொற்கிழி, முனியாண்டி, செல்வம், கார்த்தி, சரவணன் ,பூமி, வீர .முத்துராமன், மாணிக்கம், முத்துப் பாண்டி, ராம்குமார், எஸ். கண்ணன், எஸ். பாண்டி ராஜ், முத்துராக்கு, ஆரோக்கியமேரி, சூசை, அருள்ராஜ், ஆரோக்கியசாமி, சாத்தப்பன், ஜஸ்டின் திரவியம், அமல்ராஜ், ஆரோக்கியம், அலெக்ஸ், ராபர்ட், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதாசெந்தில், இலக்கிய அணி குரு. போஸ், ஒன்றிய கழக துணைச் செயலாளர் முத்துக்குமார் சன். சீமான் சுப்பையா, மீனவரணி அண்ணாமலை, விவசாய அணி சேகர், உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பரணிகிட்டு நன்றி கூறினார். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை கல்லல் கிழக்கு ஒன்றிய செயலாளர் நா. நெடுஞ் செழியன் தலைமையில் ஒன்றிய கழக நிர்வாகிகள் அரண்மனைச் சிறுவயல் ஊராட்சி கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள். நிகழ்ச்சியில் 3000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கேஆர். பெரிய கருப்பன், மூ .தென்னவன் திண்டுக்கல் லியோனி ஆகியோர் வழங்கினார்கள். பொதுக்கூட்ட ஏற்பாடுகள் மாநாடுகள் போன்று அமைந்திருப்பதாக அமைச்சர் பெரிய கருப்பன் திண்டுக்கல் லியோனி ஆகியோர் ஒன்றிய செயலாளர் நெடுஞ் செழியன் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகளை மேடையில் பாராட்டினார்கள்.



காரைக்கால் மாநில தி.மு.க.அமைப்பாளர் ஏ.எம்.எச்.நாஜிம் எம்.எல்.ஏ. தலைமையிலும் நிரவி திருப்பட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாகாதியாகராஜன் முன்னிலையிலும் காரைக்கால் மாநில தி.மு.க.இளைஞரணி அமைப்பாளர் முஹம்மது ரிபாஸ் ஒருங்கிணைப்பிலும் நடைபெற்ற மாபெரும் உண்ணாவிரத போராட்டத்தில் கழக நிர்வாகிகளும், கழக தொண்டர்களும், மாணவ, மாணவிகளும் ஏராளமான பொதுமக்களும் நீட் எதிர்ப்பு உண்ணாவிரத போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

சக மாணவர்களால் தாக்கப்பட்டு நெல்லை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும்

## அண்ணன் -தங்கையை கனிமொழி கருணாநிதி எம்.பி. நலம் விசாரித்தார்!

### அமைச்சர் மதிவேந்தன் பங்கேற்பு!

நெல்லை, ஆக. 22 -

நெல்லை மாவட்டம் நாங்குநேரி பகுதியில் சக மாணவர்களால் பாதிக்கப்பட்டு நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி பல்நோக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அண்ணன், தங்கையை கழக துணைப் பொதுச் செயலாளர் - தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி,வனத்துறை அமைச்சர் மதிவேந்தன் ஆகியோர் நேரில் சென்று பார்த்து அவர்களிடம் சிகிச்சை பற்றி கேட்டறிந்தும்,அவரது பெற்றோருக்கு ஆறுதலும் தெரிவித்தனர்.

நாங்குநேரி பகுதியில் சக மாணவர்கள் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் சிறுவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவுக்கிணங்க மருத்துவர்கள் மூலம் சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் உத்தரவிற்கிணங்க நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு ஆகியோர் நேரில் சென்று 12.8. 2023 அன்று நிதி உதவி வழங்கி ஆறுதல் கூறி னார்கள்.

மேலும் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் இருந்து சிறப்பு மருத்துவர் மூலம் சிறுவர்களுக்கு சிறப்பான சிகிச்சையும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி பல்நோக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அண்ணன்,தங்கையை கழக துணை பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி வனத்துறை அமைச்சர் மதிவேந்தன் ஆகியோர் நேரில் சென்று பார்த்து அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள். தொடர்ந்து கனிமொழி எம்.பி அவர்களது குடும்பத்தினரிடம் முதலமைச்சர் அவர்கள் உத்தரவுக்கிணங்க சிறுவர்களுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. அரசு உறுதுணையாக இருக்கும். சிறுவர் குணமடைந்து வீடு திரும்பியதும் அவர்களது பள்ளி மற்றும் கல்லூரி படிப்பை தொடர்வதற்கும் உரிய நடவடிக்கையும் எடுக்கப்படும். முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு உறுதுணையாக இருக்கும் என்று கனிமொழி கருணாநிதி எம்.பி கூறினார்கள்.

பின்னர் கனிமொழி கருணாநிதி எம்.பி.மருத்துவக் கல்லூரி முதல்வர் ரேவதி மற்றும் மருத்துவர்களுடன் கலந்து ஆலோசித்து சிகிச்சை பற்றிய முழு விவரங்களையும் கேட்டறிந்தார்.

அப்போது நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ.மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப.கார்த்திகேயன் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், மேயர் சரவணன்,துணை மேயர் ராஜ், மாமன்ற உறுப்பினர் உலகநாதன் உள்பட பலர் சென்றனர்.

மீனவர்களுக்கு நலத்திட்ட உதவிகள்! ஆயிரம் கோடி ரூபாயில் 10 முக்கிய அறிவிப்புகள்!

## முதலமைச்சருக்கு மீனவ மக்களின் கோடி நன்றிகள்!

### கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, ஆக. 22 -

கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கை வருமாறு”

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களே, உங்களின் இடைவிடாத மக்கள் பணி நாளுக்கு நாள் தமிழ்நாட்டு மக்களிடையை நம்பிக்கையை அதிகரித்து வருகிறது. ஓய்வில்லாமல் உழைத்துவரும் நீங்கள், கடந்த 18ம் தேதி இராமேஸ்வரத்தில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளீர்கள். அது மட்டுமல்ல மீனவ மக்களுக்காக சுமார் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 முக்கியமான அறிவிப்புகளையும் வெளியிட்டுள்ளீர்கள்.

ஒவ்வொரு அறிவிப்புகளும் மீனவ மக்களின் நீண்டகால ஏக்கத்தை தீர்த்து வைக்கும் அறிவிப்புகள் மட்டுமல்ல. வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நம்பிக்கைக்குரிய உறுதிமொழிகள். மீனவர்களின் நலனில் எங்களை விட அதிகமாக சிந்தித்து நீங்கள் செயல்படுகிறீர்கள் என்பதற்கு இந்த அறிவிப்புகளே சாட்சி. இதற்கு மனமார்ந்த நன்றி தெரிவித்துள்ள அனைத்து மீனவ சங்கங்களும், இது மீனவ சமுதாயத்தினருக்கு முக்கியமான நாள் என்று மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தியிருக்கின்றன. மீனவர்களின் இந்த அளவில்லா மகிழ்ச்சியை ஊடகங்களும் செய்தியாக வெளியிட்டுள்ளன.

அது மட்டுமல்லாமல் மீனவ குடும்பங்களையும் தேடிச் சென்று சந்தித்து அவர்களின் நலனை விசாரித்திருப்பதன் மூலம் மீனவர்களின் குடும்பத்தில் ஒருவராய் நீங்கள் இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையும், மகிழ்ச்சியும் அதிகரித்துள்ளது.

இராமேஸ்வரத்தில் நீங்கள் பேசியபோது “மீனவர்களின் நலனை காப்பதற்காக, என்றைக்கும் திராவிட முன்னேற்றக்கழகம், நம்முடைய திராவிட மாடல் அரசு இருக்கும். எனவே இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அப்படித்தான் செயல்படுவான் என்ற உறுதியைக் கூறிக்கொண்டு, அதற்கு மீனவ சமுதாயம் எப்போதும் போல எங்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்” என்று வலியுறுத்தினீர்கள்.

உங்கள் உடல் நலனை விட எங்கள் நலனில் அக்கறை காட்டும் உங்களுக்கு என்றும் உறுதுணையாக இருப்போம். அதைவிட மீனவ மக்களுக்கு எப்போதும் உறுதுணையாக நீங்கள் இருக்கிறீர்கள் எனும் போது மிகப்பெரிய புத்துணர்ச்சியை அளிக்கிறது. அதற்காக எப்பொழுதும் மீனவ மக்கள் கடமைப்பட்டுள்ளோம்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு மீனவர்களின் சார்பாக எப்பொழுதும் மனமார்ந்த நன்றிகள்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.